**2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற கா.பொ.த.(உயர் தர) முடிவுகளின் அடிப்படையில் 2020/2021 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கான அறிவித்தல்.**

மேற்கூறிய மாணவர்கள் 2020/2021 கல்வியாண்டுக்கான விண்ணப்பத்தினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க முன்னர் அனுமதிக்கான கைநூலினை வாங்க அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (யுஜிசி) வலைத்தளத்திலிருந்து www.ugc.ac.lk மட்டுமே பதிவிறக்கம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலினை வெளியிடுவதற்கான முழு உரிமையையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே கொண்டுள்ளது என்பதையும், இக் கைநூலினை எந்த்வொரு வலைத்தளங்கள் அல்லது சமூக ஊடகங்களிலோ பகிரவோ வெளியிடவோ வேறு எந்த மூன்றாம் தரப்பினருக்கும் யுஜிசி அங்கீகாரம் வழங்கவில்லை என்பதையும் நினைவில் கொள்க.

எவ்வாறாயினும், மேற்கண்ட அனுமதிக் கைநூல் வெவ்வேறு வலைத்தளங்களில் அல்லது பிற சமூக ஊடகங்கள் மூலம் பதிவேற்றப்பட்டிருப்பதை யுஜிசி அவதனித்துள்ளது.

மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக, அத்தகைய வலைத்தளங்கள் / சமூக ஊடகங்களில் கிடைக்கப்பெற்ற கைநூலின் உள்ளடக்கங்களிற்கு யுஜிசி பொறுப்பாகாது அத்துடன் பிழையான அல்லது தவறான தகவல்கள் ஏதேனும் அவற்றில் காணப்படுமாயின் அவற்றை யுஜிசி பொறுப்பேற்காது என்பதை நினைவில் கொள்க.

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
03.06.2021